# டி. எஸ். அவிநாசிலிங்கம்



தி. சு. அவிநாசிலிங்கம் தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்ட வீரர்களில் முன்னணியில் இருந்தவர். தன் இளமைப்பருவத்திலேயே மகாத்மா காந்தியடிகளின் போதனைகளாலும் தேசத்தொண்டாலும் கவரப்பட்டு விடுதலைப்போரில் விரும்பி ஈடுபட்டவர். கோவை மாவட்டத்தில் காந்தியடிகளின் கருத்துகளைப் பரப்புவதிலும் விடுதலைப்போரில் ஈடுபட மக்களை உற்சாகப்படுத்தி வழிநடத்தியதிலும் தன்னிகரற்று விளங்கியவர். விடுதலைப்போரில் தானும் கலந்து கொண்டு நான்கு முறை சிறைசென்றவர். ஒரு பக்கம் விடுதலைப்போரில் ஈடுபட்டுக்கொண்டே இன்னொரு பக்கம் விடுதலை பெற்றபின் நாட்டுக்குத் தேவையான தலைவர்களை, தொண்டர்களை, அதிகாரிகளை, மற்ற அலுவலர்களை உருவாக்கத் தேசியக்கல்வி புகட்டும் கல்வி நிறுவனங்களை அற்புதமாக எல்லாரும் வியக்கும் வண்ணம் உருவாக்கியவர். விடுதலை பெற்றபின் கொஞ்சகாலம் அரசியலில் இருந்து சேவை செய்துவிட்டுப் பின்பு அரசியலிலிருந்து விலகித் தம் வாழ்நாள் முழுவதையும் கல்விப் பணிக்காகவும் நாட்டுநலப் பணிகளுக்காகவும் தம்மை அர்ப்பணித்துக்கொண்டவர். தனது சிறந்த தேசசேவைக்காக இந்திய அரசிடமிருந்து பத்மபூஷன் விருது பெற்றவர். தாம் ஆரம்பித்து வளர்த்த ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயா கல்வி நிறுவனங்கள், அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகம், அதனுடன் சேர்ந்த பிற கல்வி

க.குழந்தைவேல்

நிறுவனங்கள் ஆகியவற்றின் சிறப்பான பணிகளுக்காக இந்திய, உலகக் கல்வி நிபுணர்களால் பாராட்டப்பெற்றவர். தமிழ் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பெரும் முயற்சி செய்து தமிழ்க் கலைக்களஞ்சியம், குழந்தைகள் கலைக்களஞ்சியம், திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு, காந்தியடிகள் நூல்களின் தமிழ்ப் பதிப்பு ஆகியவற்றை வெளியிட்டவர். நிறைவாழ்வு வாழ்ந்து தமது 89-ஆம் ஆண்டில் இயற்கை எய்தியவர். இந்திய விடுதலைப்போரில் அவராற்றிய தொண்டு மகத்தானது.

அவிநாசிலிங்கம் 1920-ஆம் ஆண்டு சென்னையில் ஜுனியர் இன்டர் மீடியட் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். அப்போது காந்தியடிகள் ரௌலட் சட்டத்தை எதிர்த்துக் கிளர்ச்சி ஆரம்பித்தார். அது சம்பந்தமாக இந்தியா முழுதும் சுற்றுப்பயணம் செய்தார். அச்சமயம் அவர் சென்னைக்கும் வந்தார். சென்னை கடற்கரையில் மிகப்பெரிய கூட்டம் நடைபெற்றது. ஆங்கில அரசுடன் ஒத்துழை யாமை பற்றியும், கதர், அஹிம்சை ஆகியவை பற்றியும் காந்தியடிகள் பேசினார். அன்றுதான் அவிநாசிலிங்கம் முதன்முதலாகக் காந்தியடிகளைப் பார்த்தார்; பேச்சைக் கேட்டார். காந்தியடிகளின் கருத்துகளால் பெரிதும் கவரப்பட்டார். அன்றே கதர் அணியவும் காந்தியடிகளின் புனிதக்கொள்கை களைப் பின்பற்றவும் தீர்மானித்தார்.

1926-இல் காந்தியடிகள் கதர் இயக்கத்தைப் பரப்ப நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது திருப்பூரில் காந்தியடிகளை அவிநாசிலிங்கம் சந்தித்தார். அவரது நெருங்கிய நண்பரான கே. எஸ். ராமசாமிக் கவுண்டர் வீட்டில் அப்போது காந்தியடிகள் தங்கியிருந்தார். ஆகவே அவிநாசிலிங்கத்திற்கு இம்முறை காந்தியடிகளுடன் நெருங்கிப்பழகவும், பேசவும் கேள்விகள் கேட்கவும் வாய்ப்புக் கிடைத்தது. காந்தியடிகளுக்குச் சேவை செய்யும் பாக்கியமும் அவருக்குக் கிடைத்தது. இதனால் காந்தியடிகள்மீதும் அவரது கொள்கைகள்மீதும் அவிநாசிலிங்கத்துக்கு ஈடுபாடு மிக அதிகமாயிற்று. அதன் பின்னர் காந்தியடிகளின் பேச்சுகளையும், விடுதலைப்போராட்ட நிகழ்ச்சி களையும், மிகக்கவனமாகச் செய்தித்தாள்களில் படித்து வந்தார். அந்த மகத்தான விடுதலைப்போராட்டத்தில் தானும் பங்கெடுத்து கொள்ள வேண்டும் என்னும் ஆர்வமும் துடிப்பும் அவருக்கு அதிகரித்துக்கொண்டிருந்தது. அப்போது அவர் தனது படிப்பை முடித்துக் கோவையில் வழக்கறிஞராகப் பணியைத் துவக்கி யிருந்தார். 1927-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் மகாநாட்டுக்குப் பார்வையாளராகச் சென்றிருந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணசங்கத்திலும், சுவாமி விவேகானந்தர் போதித்த உண்மைகளிலும் அவருக்கு நிறையப் பற்றுதல் இருந்தது. அவர்கள் ஆரம்பித்த இயக்கத்தில் சேர்ந்து, அதற்கு ஏற்றவாறு தொண்டாற்ற வேண்டும் என்பது அப்போது அவருக்கு இருந்த விருப்பம். அதை அனுசரித்து ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயம் என்ற ஒரு கல்வி நிறுவனத்தை ஆரம்பித்தார். ஆனால் செய்தித்தாள்களில் வந்த காந்தியடிகளின் வார்த்தைகள் அவரது காதுகளில் கணீர்

கணீரென ஒலித்தன. இரவும் பகலும் அவை அவரது மனத்தை உறுத்திக்கொண்டிருந்தன. காந்தியடிகள் நாட்டு விடுதலைக்காக ஆரம்பித்திருக்கும் இயக்கத்தில் சேராது இருப்பது நாட்டுக்குச் செய்யும் துரோகம் என்றும், அந்த இயக்கத்தில் சேர்ந்து விடுதலைக்காகப் பாடுபடுவதே நாட்டுக்குத் தாம் செய்ய வேண்டிய கடமை என்றும் அவர் மனதில் தோன்றியது. காந்தியடிகள் உப்புச் சத்தியாக்கிரகத்துக்காகத் தண்டிக்கு நடந்து செல்லும் பயணத்தைப்பற்றிச் செய்தித்தாள்களில் படிக்கப் படிக்க அவருக்குக் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடும்.

1930-ஆம் ஆண்டு மேமாதம் 5-ஆம்தேதி அவரது பிறந்த நாளன்று ஊட்டி ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஆசிரமத்தில் இருந்தார். அன்று மதியம் செய்தித்தாளில் காந்தியடிகள் கைது செய்யப்பட்டார் என்னும் செய்தியைப்படித்துத் திடுக்குற்றார். இனியும் சும்மா இருப்பது சரியல்ல என அவருக்குத் தோன்றியது. அன்றிரவு அவரது மனதில் பெரிய போராட்டம். கடைசியில் விடுதலைப் போரில் பங்கெடுப்பதே சரி என்ற முடிவுக்கு வந்தார். மறுநாள் கோவை திரும்பியதும் காங்கிரஸ் அலுவலகம் எங்குள்ளது என விசாரித்து அங்கு சென்று காங்கிரஸ் அங்கத்தினராகச் சேர்ந்தார். அன்றுதான் பின்னால் தனக்கு விடுதலைப்போரில் உற்ற துணைவர்களாக இருந்த சி.பி. சுப்பையாவையும், சுப்ரி என்னும் சுப்பிரமணியத்தையும் முதன் முதலாகச் சந்தித்தார். அக்காலத்தில் காங்கிரஸில் சேருவதென்றாலே விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுப்பது என்றும், சிறை செல்வது போன்ற பல தொல்லைகளுக்கு ஆளாவது என்பதும் தான் பொருள்.

உடனே அவிநாசிலிங்கத்தைத் தலைவராகக் கொண்டு கோவை நகரக் காங்கிரஸ் கமிட்டி அமைக்கப்பட்டது. அதன் பின் கோவை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டிக்கும் அவர் தலைவரானார். விடுதலைப்போராட்ட காலம் வரைக்கும் அவரே கோவை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினராகவும் இருந்தார்.

அவரது தந்தையும் தாயும் அவரது இந்த நடவடிக்கைகளை மிகவும் எதிர்த்தனர். ஒரு சிறந்த வக்கீலாக வர இருக்கும் வாய்ப்பை அவரது நடவடிக்கைகளால் அவர் இழந்துவிடக்கூடும் என அவரது வக்கீல் நண்பர்கள் அவரது செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர் ஆரம்பித்திருந்த ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயம் அவரது நடவடிக்கைகளால் பெரிதும் பாதிக்கப்படும், மூடவேண்டிவேண்டிய நிலைகூட வரலாம் என அவரது நண்பர்கள் சிலர் அவரை விடுதலைப்போரில் பங்கெடுப்பதிலிருந்து தடுக்க முயன்றனர். இருப்பினும் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது அவர் காங்கிரஸ் இயக்கப்பணிகளிலும் விடுதலைப்போராட்டத்திலும் முழு முயற்சியுடன் ஈடுபட்டார்.

1930-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5-ஆம்தேதி அவிநாசிலிங்கமும், டி. ராகவாச்சாரியும் கோவை வாலாங்குளத்தில் அரசுச் சட்டத்தை எதிர்த்து உப்புக்காய்ச்சினார்கள். மறுநாள் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களைப் பின்பற்றி சி.பி. சுப்பையா, கே. சுப்ரி போன்றவர்களும் உப்புக்காய்ச்சிக் கைது ஆனார்கள். ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை இவர்களுக்கு விதிக்கப்பட்டது. முதலில் கோவை மத்தியச் சிறையிலும் பின்பு வேலூர் மத்தியச் சிறையிலும் வைக்கப்பட்டனர்.

அவிநாசிலிங்கம் திருப்பூரில் பரம்பரையாகப் புகழ்பெற்ற வசதியான குடும்பத்தைச் சார்ந்தவர். ஆகவே அவருக்குக் கோவை மாவட்டத்தில் நல்ல மதிப்பும், செல்வாக்கும் இருந்தது. அத்துடன் அவர் ஒரு துடிப்புமிக்க படித்த இளைஞர். ஆகவே அவரைப் பின்பற்றிப் பல இளைஞர்கள் ஊக்கத்துடன் விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டனர். பின்னால் இவர்கள் அவிநாசிலிங்கத்திற்கு விடுதலைப் போராட்டத்தில் பெருந்துணையாக இருந்தனர். இவர்களில் கோவையைச் சார்ந்த சி.பி. சுப்பையா, கே. சுப்ரி, சி. சுப்பிரமணியம், டி. ராகவாச்சாரி, கோபியைச் சார்ந்த கே.கே. சுப்பண்ண கவுண்டர், ஆர். எஸ் ஸ்ரீகண்ட ஐயர், சாமிக்கவுண்டர், ஜி.எஸ்.லட்சுமணன், ஈரோட்டைச் சார்ந்த எம்.ஏ. ஈஸ்வரன், கே. எஸ். ராமசாமிக்கவுண்டர், ஆர்.எம். மகுடபதி, கே. எஸ். பெரியசாமி, பல்லடம் ஆர். எம். குமாரசாமிக்கவுண்டர், வடிவேல், உடுமலைப் பேட்டை வேலப்ப நாயுடு, பவானி பி.கே. நல்லசாமி, ரங்கசாமி செட்டியார் ஆகியவர்கள் மிக முக்கியமானவர்கள். இவர்களைத்தவிர இன்னும் பலர் விடுதலைப்போராட்டத்தில் அவிநாசிலிங்கம் அவர்களுடன் சேர்ந்து ஈடுபட்டனர்.

அவிநாசிலிங்கம் கோவை மாவட்டம் முழுவதும் அயராது சென்று காங்கிரஸ் இயக்கத்துக்கு அங்கத்தினர்களைச் சேர்ப்பதிலும், காந்தியடிகளின் விடுதலைப் போராட்டத்திட்டத்தை விளக்கிக் கூறுவதிலும், விடுதலைப் போருக்கு மக்களைத் தயார் செய்து ஈடுபடுத்துவதிலும் முழு மூச்சுடன் ஈடுபட்டார். இரவு பகலாகச் சிரமம் பாராமல் நிறைய நேரம் உழைத்தார். இதன் காரணமாக நூற்றுக்கணக்கான தொண்டர்கள் 1930-ஆம் ஆண்டு நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகத்திலும் 1932-ஆம் ஆண்டு நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்திலும் உற்சாகத்துடன் பங்கெடுத்தனர். போகப்போக ஆயிரக்கணக்கான மக்கள் இந்த இயக்கத்தில் ஈடுபட்டனர். இவர்களுக்கெல்லாம் அவிநாசிலிங்கம் தலைவராக, நண்பராக வழிகாட்டியாக இருந்து ஊக்கமும் உற்சாகமும் கொடுத்தார்.

1931-ஆம் ஆண்டு கராச்சியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் அவிநாசி லிங்கம் கலந்து கொண்டார். அவருக்கு நெருங்கிய நண்பர்களான என்.எம். ஆர் .சுப்பராமன், சர்தார் அ. வேதரத்னம் பிள்ளை, பி. கோபால் ரெட்டி ஆகியோரும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். பத்து லட்சம் பேருக்கு மேல் கலந்து கொண்ட அந்த மாபெரும் மாநாட்டில் கலந்து கொண்டது அவிநாசிலிங்கத்திற்கு ஒரு பெரும் உற்சாகத்தையும் வேகத்தையும் அளித்தது. ஒரு மகத்தான இயக்கத்தில் தானும் ஒருவர் என்னும் எண்ணமே அவருக்கு ஊக்கத்தையும் பெருமிதத்தையும் அளித்தது.

கராச்சி காங்கிரஸிலிருந்து திரும்பியதும் இரண்டு முக்கியப் பணிகள் அவருக்குக் காத்திருந்தன. முதலாவது, கோவை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் என்னும் முறையில் கோவை மாவட்டத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் விடுதலை இயக்கத்தின் செய்தியை எடுத்துச்சென்று விடுதலைப் போருக்கு மக்களைத் தயார் செய்வது; இரண்டாவது, சேலம், தஞ்சாவூர், மதுரை போன்ற அண்டை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டிகளின் அழைப்பை ஏற்று அங்கு சென்று விடுதலை இயக்கப் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு அம்மாவட்ட மக்களையும் விடுதலைப்போருக்குத் தயார் செய்வது. இப்பணிகளை அவர் மிகுந்த பக்தி சிரத்தையுடனும் முழு மூச்சுடனும் நேரம் காலம் பார்க்காமல் மிகுந்த ஈடுபாட்டுடன் செய்தார்.

இங்கிலாந்தில் நடைபெற்ற வட்டமேஜை மாநாடு தோல்வியடைந்த பின் ஆங்கில அரசு இந்தியாவில் மிகக் கொடுமையான அடக்குமுறைகளைக் கையாண்டது. காந்தியடிகள் இந்தியா திரும்பியதும் அவரையும் காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களையும் கைது செய்து சிறைக்கு அனுப்பியது. காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் நாடு முழுவதிலும் கைது செய்யப்பட்டுச் சிறைக்கு அனுப்பப்பட்டனர். அவிநாசிலிங்கம் 1932-ஆம் ஆண்டில் இரண்டாம் முறையாகச் சிறை சென்றார். தான் ஆரம்பித்த வித்தியாலயத்தின் பாதுகாப்பையும் வளர்ச்சியையும் எண்ணியபோது விடுதலை இயக்கத்திலிருந்து விலகி விடலாமா என்றுகூட எண்ணினார். ஆனால் நாட்டுப்பணிதான் தலையானது, வித்தியாலயத்திற்கு என்ன ஆனாலும் ஆகட்டும் எனத் துணிந்து சிறை சென்றார். இம்முறை ஓராண்டுக்காலம் அவருக்கு சிறைத் தண்டனை. அக்காலத்தை வீணாக்காமல் இந்தியப் பொருளாதார நூல், சுவாமி விவேகானந்தரின் கல்விக் கருத்துகளின் தொகுப்பான 'கல்வி' என்னும் நூல் ஆகியவற்றை எழுதினார்.

1934-ஆம் ஆண்டு காந்தியடிகள் ஹரிஜன இயக்கம் சம்பந்தமாகத் தென்னாடு வந்தார். அப்போது கோவை மாவட்டத்தில் காந்தியடிகளின் சுற்றுப்பயணத்தை ஏற்பாடு செய்யும் பொறுப்பும், ஹரிஜன நிதி வசூல் செய்யும் பொறுப்பும் அவிநாசிலிங்கத்திடம் விடப்பட்டது. இம்முறை காந்தியடிகளிடம் நெருங்கிப்பழகும் வாய்ப்பு அவிநாசிலிங்கத்திற்குக் கிடைத்தது. அவர் நடத்தி வந்த ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயத்தில் காந்தியடிகள் ஓரிரவு தங்கிப் புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

1934-ஆம் ஆண்டு அவிநாசிலிங்கம் டெல்லி மத்திய சட்டசபைக்குக் கோயமுத்தூர், சேலம், வடஆற்காடு மாவட்டங்கள் அடங்கிய தொகுதியிலிருந்து பெருவாரியான ஓட்டுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். பணக்காரத் தொழில் அதிபர்கள், வியாபாரிகள் கொண்ட கோவை வணிகர்கள் தொகுதிக்கு மிகுந்த அனுபவமும் புகழும் மிக்க ஆர்.கே. சண்முகம் செட்டியாரை எதிர்த்துச் சாமி வெங்கடாசலம் செட்டியாரை நிறுத்திப் பெருவாரியான ஓட்டுக்களால் வெற்றி பெறச்செய்தார். மத்திய சட்டசபையில் அவிநாசிலிங்கம் தான் வயதில் மிக இளையவர். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட டாக்டர் பி. வரதராஜுலு

நாயுடு மிக்க அனுபவமும், புகழும் மிக்கவர். நாயுடுவை ஆதரித்துப் பிரசாரம் செய்த பெரியார் ஈ.வே. ராமசாமி நாயக்கர் இவ்வளவு பெரிய அனுபவம் மிக்கவரை எதிர்க்கக் காங்கிரஸ் ஒரு கல்லூரிமாணவரை நிறுத்தியுள்ளது எனக் கேலியாக எழுதினார். மத்திய சட்டசபையில் அவிநாசிலிங்கம் மிகுந்த சிரத்தையுடன் நன்கு தயார் செய்து விவாதங்களில் திறமையாகப் பங்கு கொண்டார்.

1941-இல் காந்தியடிகள் தனி நபர் சத்தியாக்கிரகத்தைத் துவக்கினார். அவிநாசிலிங்கமும் அதில் கலந்துகொண்டு மூன்றாம் முறையாகச் சிறை சென்றார். இம்முறை அவருக்கு ஆறுமாதகாலம் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டது.

அவிநாசிலிங்கம் கோவை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்ததுடன் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகவும் இருந்தார். ஆகவே தமிழ்நாட்டில் பல இடங்களிலும் விடுதலைப்பணிக்கு மக்களைத் தயார்செய்யும் பொறுப்பும் அவருக்கு இருந்தது. ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்தியாலய வளர்ச்சியை ஒரு பக்கம் கவனித்துக்கொண்டே கிராமம் கிராமமாகச் சென்று ஆயிரக்கணக்கான மக்களை விடுதலைப்போரில் ஈடுபட வைத்தார். அனேகமாகக் கோவை மாவட்டத்தில் எல்லாக் கிராமங்களிலும் தலைவர்களையும் தொண்டர்களையும் உருவாக்கி அவர்கள்மூலம் விடுதலை இயக்கத்தை எல்லா இடங்களிலும் பரப்பினார்.

1942-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8-ஆம்தேதி பம்பாயில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் ஆங்கில அரசை உடனடியாக இந்தியாவை விட்டு வெளியேறுமாறும், ஒவ்வொரு இந்தியனும் இதைச் செய்ய வேண்டும் அல்லது இதற்காக உயிரைக் கொடுக்க வேண்டும் என்னும் பொருள்கொண்ட 'செய் அல்லது செத்துமடி' என்னும் தீர்மானத்தை நிறைவேற்றியது. அவிநாசிலிங்கமும் பம்பாய் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொண்டார். ஆங்கில அரசு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொண்ட தலைவர்களைப் பம்பாயிலேயே கைது செய்தது. அவிநாசிலிங்கம் ஆங்கில அரசின் பிடியில் சிக்காமல் தலைமறைவாகி ஆகஸ்ட் 12-ஆம்தேதி கோவையை அடைந்தார். அவரைக் கைது செய்ய அரசு வாரண்ட் பிறப்பித்திருந்தது. ஆகவே, பகல் நேரங்களில் போலீஸ் கண்ணுக்குப் படாமல் இருந்து இரவு நேரங்களில் கோவை மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் சென்று காந்தியடிகளின் 'செய் அல்லது செத்து மடி' என்னும் அறைகூவலின் பொருளை மக்களுக்கு எடுத்துக்கூறி மக்களை விடுதலையின் இறுதிப்போருக்குத் தயார் செய்தார். ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத்தில் காந்தி ஆதாரப்பயிற்சிப் பள்ளியை ஆகஸ்ட் 17-ஆம்தேதி துவக்குவதற்கு அவர் ஏற்கெனவே திட்டமிட்டிருந்தார். அவர் அத்துவக்க விழாவில் திட்டமிட்டபடி கலந்து கொண்டார். விழா முடிந்ததும் போலீஸ் அவரைக் கைது செய்தது. அவர் முதலில் கோவை மத்தியச் சிறைக்கும், பின்பு வேலூர் மத்தியச் சிறைக்கும் அனுப்பப்பட்டார்.

காங்கிரஸ் தலைவர்களைக் கைது செய்ததுடன் ஆங்கில அரசு காங்கிரஸ் இயக்கத்துக்கும் தடைவிதித்தது. பல கொடுமையான சட்டங்களை இயற்றி, விடுதலை இயக்கத்தை அடக்க, அழிக்க பல கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டது. மக்கள் சொல்லொணாத் துயரத்துக்கும், இன்னல்களுக்கும் ஆளானார்கள். நாடு முழுதும் வேலை நிறுத்தங்களும், அரசு எதிர்ப்பு நடவடிக்கைகளும், அரசு அலுவலகங்களை உடைத்தல், அவற்றிற்குத் தீவைத்தல் போன்ற செயல்களும் பரவலாக நடைபெற்றன. கோவை மாவட்டத்திலும் அவினாசிலிங்கம் செய்திருந்த பணிகளின் மூலமாக ஆயிரக்கணக்கானவர்கள் ஆங்கில அரசை எதிர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அவிநாசிலிங்கம், சிறையில் படித்தல், புத்தகம் எழுதுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டிருந்தார். சுவாமி விவேகானந்தரின் 'கொழும்பு முதல் அல்மோரா வரை' என்னும் புத்தகத்தைத் தமிழில் மொழிபெயர்த்தார். சுவாமியின் பேச்சுகள், எழுத்துக்களிலிருந்து பகவத்கீதையைப் பற்றிய கருத்துகளைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். ஆனால் உடல்நலக் கோளாறு காரணமாக அப்பணியை அவரால் முடிக்க முடியவில்லை. ஒருநாள் இரவு இருமல் அதிகமாகிக் கட்டுக்கு அடங்காமல் இருந்தது. ஆகவே சிறைச் சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிறை மருத்துவர்கள் அவருக்கு ஆஸ்த்துமா அல்லது காசநோய் இருக்கலாமெனக் கருதினார்கள். அவரது உடல் எடை குறைந்து அவர் மிகவும் வலிமை குன்றி இருந்தார். அவரால் வழக்கம்போலச் சாப்பிடவும், பணிகளைக் கவனிக்கவும் முடியவில்லை. சிறை அதிகாரிகள் கலவரமடைந்து அரசுடன் தொடர்பு கொண்டு மிகச் சிரமப்பட்டு அவரை விடுதலை செய்தனர். சிறையிலிருந்து வெளிவந்தபின்பும் அவரது நோய் தொடர்ந்து வருத்திக்கொண்டிருந்தது. சிறையில் அவருக்கு ஏற்பட்ட இந்த ஆஸ்த்துமா நோய் அவரது இறுதிக்காலம் வரை அவருக்கு இருந்து தொல்லை கொடுத்துக்கொண்டிருந்தது. அவர் தனது கட்டுப்பாடு மிக்க வாழ்க்கையாலும் தொடர்ந்த முயற்சியாலும் அதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தாலும் அது அவ்வப்போது தொந்தரவு கொடுத்துக்கொண்டுதான் இருந்தது.

இரண்டாம் உலகப்போருக்கும் பின்பு உலகச் சூழ்நிலை பெரிதும் மாறிவிட்டது. இங்கிலாந்து தனது பழைய வலிமையை இழந்து இருந்தது. அங்கு பதவிக்கு வந்த தொழிற்கட்சி இந்தியாவை இனியும் தொடர்ந்து தனது ஆட்சியின் கீழ் வைத்திருக்க இயலாது என்பதை உணர்ந்து இந்தியாவிலிருந்து வெளியேற முடிவு செய்தது. அதற்கு முன்னேற்பாடாக 1945-இல் தேர்தல்கள் நடத்தித் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசிடம் இந்தியாவின் பொறுப்பை ஒப்படைக்க முடிவு செய்தது.

காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் தேர்தலில் பங்கெடுக்க முடிவு செய்தன. அவிநாசிலிங்கம் சென்னை சட்டசபைத் தேர்தலில் பல்லடம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். சென்னை மாநிலத்தில் டி. பிரகாசம் தலைமையில் அமைந்த காங்கிரஸ் மந்திரி சபையிலும், பின்பு பி.எஸ். குமாரசாமி ராஜா

தலைமையில் அமைந்த காங்கிரஸ் மந்திரி சபையிலும் அவிநாசிலிங்கம் கல்வி அமைச்சர் பொறுப்பை ஏற்று மிகவும் திறமையாகப் பணியாற்றினார். தமிழுக்கும் தமிழ் ஆசிரியர்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தார். பள்ளி, கல்லூரிகளில் திருக்குறளைக் கட்டாயமாகப் போதிக்க ஏற்பாடு செய்தார். இவை போக இன்றும் நிலைத்து நிற்கும் பல மாறுதல்களைக் கல்வியில் கொண்டு வந்தார்.

அவிநாசிலிங்கம் நாடு விடுதலை பெற்ற பின் இந்தியாவின் பாராளு மன்றத்தில் லோக்சபை உறுப்பினராகவும், ராஜ்ய சபை உறுப்பினராகவும் இருந்து, நல்ல சட்டங்கள் உருவாக, நாடு நல்ல முறையில் ஆட்சி செய்யப்பட உறுதுணையாக இருந்தார்.

கோவை மாவட்டத்தில் கிராமம் கிராமமாகச் சென்று மக்களிடம் விடுதலை இயக்கத்தைப்பற்றிக் கூறி மக்களுக்குத் தைரியம் அளித்து அவர்களை விடுதலைப்போரில் ஈடுபட வைத்தது; அதே சமயம் இவ்வியக்கத்தை முன் னின்று நடத்த நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் சிறந்த தலைவர்களை உருவாக்கி அவர்கள் துணைகொண்டு விடுதலை இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தியது; கோவை மாவட்டத்துடன் நில்லாமல் அண்டை மாவட்டங்களுக்கும் சென்று அங்கும் விடுதலை இயக்கம் வளர உதவியது; மத்திய சட்டசபைத் தேர்தலில் தானும் வெற்றி பெற்றுக் காங்கிரஸால் நிறுத்தப்பட்ட மற்றவர் களையும் வெற்றிபெறச் செய்தது போன்றவை அவிநாசிலிங்கம் விடுதலை இயக்கத்திற்கு ஆற்றிய பெரும் பணிகளாகும்.

அவர் துவக்கிய ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயம் ஒரு தேசியக் கல்வி நிலையமாக உருவாகி விடுதலைப்போருக்கு வேண்டிய இளம் வீரர்களை உருவாக்கியதோடு விடுதலைக்குப் பின்பு நாட்டை ஆளத் தேவையான இளம் தலைமுறையினரை உருவாக்கியது; காந்தியடிகளின் ஆசிரமத்தை முன் மாதிரியாகக் கொண்டு வித்தியாலய நடவடிக்கைகளை அமைத்து இளைஞர்கள் மனதில் நாட்டுப்பற்றை உருவாக்கியது போன்றவற்றை அவரது பணியின் இன்னொரு பிரிவாகக் குறிப்பிடலாம். வாழ்நாள் முழுதும் பிரம்மச்சரிய விரதம் ஏற்றுக் கல்விக்காகவும், நாட்டு நலப்பணிக்காகவும் தம் வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

அவரது தன்னலமற்ற சேவைகளைப் பாராட்டி இந்திய அரசு 'பத்மபூஷன்' விருதையும், தமிழக அரசு 'செந்தமிழ்ச்செல்வர்' என்னும் விருதையும், மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் 'தமிழ்ப்பேரவைச் செம்மல்' என்னும் பட்டத்தையும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் கௌரவ டி.எஸ்ஸி பட்டத்தையும் அளித்துக் கௌரவித்தன. அவரது கிராம சேவைப்பணியைப் பாராட்டி 'ஜம்னாலால் பஜாஜ் விருது' வழங்கப்பட்டது. ஆயிரக்கணக்கான தேசபக்தர்கள் மனதில் ஒரு பெரிய விடுதலைச் சிற்பியாகவும், நம் பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் உள்ளங்களில் கல்விக்கண் கொடுத்த கொடை வள்ளலாகவும் அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

◆◆◆